# G.C.E. ORDINARY LEVEL
## க.பொ.த சாதாரண தரம்
### STUDENT SEMINAR SERIES
### மாணவர் செயலமர்வு
## TAMIL LANGUAGE & LITERATURE
## தமிழ்மொழியும் இலக்கியமும்

# QUESTION PAPER – I
# வினாத்தாள் - I



Powered by

# கல்வி அமைச்சு
# தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கிளை
# தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி - I

## க.பொ.த (சா.த) மாதிரி வினாத்தாள்

தரம் : 11 நேரம் : 1மணித்தியாலம்

கவனிக்க:

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. ''தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டூகம்'' இதில் மண்டூகம் என்பதன் ஒத்த கருத்து.
   1. தவளை 2. வண்டு 3. குளம் 4. தாமரை
2. ''அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்'' திங்கள் என்பது
   1. வாரம் 2. மாதம் 3. சந்திரன் 4. நாள்
3. ''இருமிடை மிடைந்த சில சொற் பெருமூதாளர்'' இதில் மூதாளர் என்பதன் எதிர்ப்பதம்.
   1. மூதாளர் 2. சீதாளர் 3. இளைஞர் 4. வயோதிபர்
4. ''கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்'' இங்கு கதி என்பதன் எதிர்க்கருத்து.
   1. நிலை 2. துர்க்கதி 3. அகதி 4. நிர்க்கதி
5. ''புவனம் மூன்றும் நலஞ்செய்யும் நாடு'' புவனம் என்பதில் அடங்காதது.
   1. மேல் உலகம் 2. பாதாள உலகம் 3. கற்பனை உலகம் 4. பூலோகம்
6. உளுவரிசி என்பது எதனைக் குறிக்கும்.
   1. உழுந்து 2. வெந்தயம் 3. கடுகு 4. ஆமணக்கு
7. டிமான்ட் (Demand) என்பது
   1. ஒளிப்பதிவு 2. படத்தொகுப்பு 3. கேள்வி 4. விற்பனை
8. ''வேய், அமை, வரை'' என்பன குறிக்கும் ஒரு சொல்
   1. காடு 2. மலை 3. கடல் 4. மூங்கில்
9. ''குதிரையின் ஆண் குண்டு'' என்பது போல பெண்
   1. வடவை 2. அலவன் 3. பெடை 4. கயம்
10. கண்திறத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
    1. நித்திரை விட்டெழுதல்
    2. அறிவு உண்டாதல்
    3. சிந்தித்தல்
    4. மகிழ்ச்சியடைதல்

11. முதுமைக்காலத் தேவைக்காக சேமித்து வைக்கப்படும் பொருள் எவ்வாறு அழைக்கப்படும்.
    1. எய்ப்பில் வைப்பு 2. சேமிப்பு 3. ஓலக்கம் 4. நித்தகம்
12. "ஆசிரியரது கொள்கைகளை மாணவன் அடியொற்றினான்". இங்கு அடியொற்றினான் என்பதன் பொருள்
    1. பின்பற்றுதல் 2. தொடர்தல் 3. கடைப்பிடித்தல் 4. கற்றான்
13. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு
    1. நித்தகம் 2. ஓலக்கம் 3. மாராயம் 4. ஓம்படை
14. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது என்ற பழமொழியின் கருத்து.
    1. கண்ணை இமை பாதுகாக்கும் 3. தன் குற்றம் தனக்குத் தெரியாது.
    2. ஈகை குணத்தை வலியுறுத்துதல் 4. வறுமையிலும் செம்மை
15. "உழைத்துப் பொருள் தேடாது செலவு செய்தால் எந்தப் பெருஞ் செல்வமும் தாழ்ந்து போகும்" என்ற கருத்தைத் தரும் பழமொழி.
    1. எறும்பூரக் கற்குழியும் 3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
    2. குந்தித் தின்றால் குன்றும் மாளும் 4. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
16. வீணாகிப் போதலைக் குறிப்பதற்குப் பொருத்தமற்ற உவமைத் தொடர்.
    1. அங்கணத்துள் உக்க அமிழ்தம் போல 3. காட்டில் எறிந்த நிலாப் போல
    2. மீகாமன் இல்லா மரக்கலம் போல 4. விழலுக்கு இறைத்த நீர் போல
17. "வேலைவெட்டி இல்லாமல் திரிகின்றான்" இங்கு இடம்பெற்ற வெட்டி என்ற சொல் இதே பொருளில் கையாளப் பெற்ற பிறிதொரு தொடர்.
    1. விறகு வெட்டி 2. பாக்கு வெட்டி 3. வெட்டிப்பேச்சு 4. வெட்டி விழுத்து
18. எதிர்ப் பொருள் குறிக்கும் இரு சொற்கள் இணைந்து வரும் இணை மொழிக்கு உதாரணம்.
    1. ஆதியந்தம் 2. ஒட்டியுலர்ந்து 3. கொஞ்சிக்குலாவி 4. கள்ளங்கபடம்
19. குறைகளை நீக்கி நல்லதை மட்டும் போற்றுதல் என்ற கருத்தினை தரும் அருஞ் சொற்றொடர்.
    1. அருணெறி போற்றாது மருணெறி போற்றி 2. ஆசைகாட்டி மோசம் செய்து
    2. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி 4. குற்றம் களைந்து குணம் பாராட்டுதல்
20. "அவருக்குக் காணியைப் பற்றி அரை குறையாகத் தெரியும்". இதில் அரைகுறை என்பது.
    1. இரட்டைக்கிழவி 2. அடுக்குத்தொடர் 3. இணைமொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்
21. பின்வருவனவற்றுள் பகாப்பதம்
    1. பொன்னன் 2. அவன் 3. தீ 4. அற்று
22. வேற்றுநிலை மெய் மயக்கம் இடம் பெற்றுள்ள சொல்
    1. மன்னன் 2. பச்சை 3. பாம்பு 4. பட்டம்
23. பின்வருவனவற்றுள் வினையடை.
    1. இனிமையாக 2. சிறிய 3. உயரமான 4. இனிமையான
24. "மதில் மேல் பூனை" இது எத்தனையாம் வேற்றுமை.
    1. 2ம் வேற்றுமை 2. 5ம் வேற்றுமை 3. 7ம் வேற்றுமை 4. 4ம் வேற்றுமை
25. கெடுதல் விகாரப் புணர்ச்சி இடம்பெற்று அமைந்த சொல்.
    1. கடலலை 2. மட்பாண்டம் 3. நீலவானம் 4. பழச்சாறு

26. நான் அவனை பேசவில்லை
அவனது பேச்சில் நியாயம் இருந்தது.
- மேற்படி வாக்கியங்களை இணைக்கும் சொல் எது?

1. ஏனெனில் 2. எனினும் 3. ஆகவே 4. என்றாலும்

27. விழுந்தவனை இது எவ்வகை பெயர் சொல்
1. மாற்றுப் பெயர் 2. தொழிற் பெயர் 3. இடுகுறிப் பெயர் 4. வினையால் அணையும் பெயர்.

28. அகராதி ஒழுங்கில் அமையாத சொற் தொகுதி
1. கறுப்பு, சுட்டி, பல்லி 2. சாடி, காகம், திறப்பு
2. கூடு, சீப்பு, தம்பி 4. சவர்க்காரம், தண்ணீர், பட்டு

29. பொருத்தமான உதாரணம் இடம்பெற்ற சொற்தொகுதி
1. ஆக்கப்பெயர் - பூக்காரி, மூலதனம் 2. கூட்டுப்பெயர் - நீர்வீழ்ச்சி, படிப்பு
2. காரணப்பெயர் - மண்வெட்டி, மரம் 4. தொழிற்பெயர் - ஆடுதல், விழுந்தவன்

30. தன்வினை – எழுதினான், ஊட்டினான்
முற்றுவினை – வந்தான், படித்தான்
எச்சவினை – பறந்தது, நடந்தது
குறிப்பு வினை – கரியன் கண்டான்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

31. மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உர ……………………. வழங்கப்பட்டது.
1. நன்கொடை 2. மானியம் 3. சன்மானம் 4. வெகுமதி

32. கண்ட இடத்தில் கள்வனை பிடிக்குமாறு நீதிபதி ………………… பிறப்பித்தார்.
1. அழைப்பானை 2. கட்டளை 3. பிடியாணை 4. உத்தரவு

33. அத்திய அவசிய பொருட்களின் விலை அதிகரிக்காது என நிதியமைச்சர் ……………. அளித்தார்.
1. உத்தரவாதம் 2. விதப்புரை 3. பரிந்துரை 4. ஆணை

34. கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக பாடசாலைகளுக்கு ………………….. அனுப்பிவைக்கப்பட்டது.
1. அறிவித்தல் 2. துண்டுப்பிரசுரம் 3. சுவரொட்டி 4. சுற்றுநிருபம்.

35. இராமன் சீதையுடனும், இலக்குமணனுடன் காட்டிற்கு……………….
1. சென்றான் 2. செல்வார்கள் 3. சென்றனர் 4. செல்கிறார்கள்.

36. நீ நன்றாக படித்தால் அன்றி பரீட்சையில் ……………………
1. சித்தி அடைய வேண்டும் 3. சித்தியடைவாய்
2. சித்தி அடைய மாட்டாய் 4. சித்தி அடைந்தாய்

➢ **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

இரவினில் உலகை மறைத்து வைத்திருந்த
இருளினை துரத்தியே பிடிப்பது போல
கிரணங்கள் என்னும் பல கரங்களை நீட்டி
கீழ்த்திசை நின்று மெல் மெல் என கிளம்பி
தடும் எரி திரள் என பனிப் பகையினைச் சாடி
திரு உரும் உலகினர் மகிழ்வுற வந்து
செங்கதிரவன் உதயம் செய்கின்றானே.

37. இரவில் உலகை மறைத்து வைப்பது எது?
1. தாமிரத் தட்டம் 2. பனிப்படலம் 3. இருள் 4. சூரியன்

38. சூரியனது கரங்களாகவும் , பகையாகவும் உருவகிக்கப்படுவன முறையே
1. இருள், உலகு 2. கிரகணங்கள், பனி 3. எரிதிரள், பனி 4. இருள், கிரணங்கள்.

39. இப்பாடலின் கருத்துக்கு பொருந்தாத கூற்று.
1. உதய சூரியன் தாமிரத் தட்டம் போல தோற்றம் அளிக்கின்றது.
2. உதய சூரியன் நெருப்புத் திரள் போல தோற்றம் அளிக்கின்றது.
3. சூரியன் உலகத்து இருளை பிடித்து வைத்திருக்கின்றது.
4. சூரிய உதயத்தால் மக்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

The National e-Learning Portal

**40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தி யொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.**

அ) மனித விழுமியங்கள் சேர்க்கப்படாத அறிவு பயனற்றது.
ஆ) அது அறவியல் சார்ந்தது.
இ) அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தவை.
ஈ) அறிவியல் என்பது அறிவு என்னும் நாணயத்தின் ஒருபக்கம் மட்டுமே
உ) அறவியல், அறிவியல் என்பன மனித வாழ்வின் இரு முக்கிய விடயங்களாகும்.

1. அ, இ, ஆ, உ, ஈ 2. உ, ஈ, ஆ, இ, அ
3. ஈ, ஆ, உ, இ, அ 4. உ, இ, ஆ, அ, ஈ

## தமிழ்மொழியும் இலக்கியமும் II

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

❖ சுருக்கமான விடை எழுதுக.

1. சந்தி பிரித்தெழுதுக.

   I. செழுந்தாதிறைக்கும்

   II. "இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாக"

   அ. மேற்படி வாக்கியம் எப்பிரதேச வழக்கு.

   ஆ. மையத்து என்பதன் பொருள்.

   III. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தற்குறியீடு கொண்டு அமைக்குக.
   அடகுரங்குக்குட்டி உனக்கு இதெல்லாம் எப்படியடா தெரியும்

   IV. "ஸ்தூலம்" என்ற சொல்லின் கருத்து புலப்படுமாறு வாக்கியம் அமைக்குக.

   V. "வரை" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

   VI. "குமார் இரண்டு குருவிகளை பிடித்தார்". செய்வினையை செயப்பாட்டு வினையாக்குக.

   VII. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை குறிப்பிடுக.
   "கூரையை பிய்த்து கொண்டு காற்று வேகமாக வீசியது"

   VIII. தட்டிக்கொடுத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்.

   IX. மலைநாட்டில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. - இவ்வாக்கியத்தின் மயக்கத்தை நீக்குக.

   X. கவிமணியின் பாடல்கள் எளிமை நிறைந்தவை.

   XI. கவிமணியின் பாடல்கள் இனிமை நிறைந்தவை.

   - மேற்படி தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியங்களாக அமைக்க.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.
   நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

   I. இன்று எமது நாட்டில் பொலித்தீன் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனால் பல சுகாதார சீர்கேடுகள், சூழல் மாசடைதல் என்பன அதிகரித்து வருகிறது. ஆகவே பொலித்தீன் பொருட்களுக்கு பதிலாக மாற்றுப் பொருட்கள் பாவிப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கி விளக்கக் கட்டுரை ஒன்று வரைக.

   II. கைபேசியின் நன்மை, தீமை தொடர்பாக இருவர்களுக்கிடையே நடைபெற்ற உரையாடல்.

III. இன்று எமது நாட்டில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. சமூக விரோத செயல்கள் மற்றும் கலாசார சீர்கேடுகள் நடை பெறுகிறது. போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் வகையில் மாணவர் மத்தியில் நீர் ஆற்றிய மேடைப்பேச்சு.

IV. பிறேம் படிப்பிலும் பிற செயற்பாடுகளிலும் கெட்டிக்காரன்தான். எனினும் வீட்டில் அடங்காப்பிள்ளையாகவே நடந்து கொண்டான். தந்தையை மதிப்பதில்லை சுற்றத்துடனும் அப்படியே , படிப்புத்திறமை காரணமாக நல்ல தொழிலும் அதன் மூலம் நல்ல குடும்ப வாழ்க்கையும் கிடைத்தன. குழந்தைகள் பிறந்தன. இப்போது அவனது மகன் பிறேமைப் போலவே அடங்காப் பிள்ளை போல நடக்கத் தொடங்கினான். தந்தையின் நிலை இப்போது பிறேமுக்கு விளங்கியது. தான்விட்ட தவறுகளை உணர தொடங்கினான்… இப் படிப்பினையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

எந்த ஒரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்து வளர வேண்டுமாயின் அது பேரியக்கமொன்றின் அம்சமாக இருத்தல் அவசியம். நாட்டுப் பாடல் வளர்ச்சியும் இவ்விதிக்கு விலக்கன்று உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டுப் பாடல்களாம். பல்வேறு காலமாகச் சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களது ஆவேசமும், உரிமைக் குரலும் நாட்டுப் பாடல்களில் ஆங்காங்கு ஒலிப்பதுண்டு. இன்ப துன்பங்களைச் சித்தரிக்கும் பாடல்களின் அடிநாதமாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது. அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை ஆதாரமாகக் கொண்டு எமது காலத்துச் சமூக இயக்கங்களில் நாட்டுப்பாடல் முதலியவற்றைக் கலந்தால் நிச்சயம் அவை புதிய வாழ்வு பெறும். ஆனால் அவ்வாறு செய்தால் அதன் "தூய்மை" கெட்டுவிடும் எனச் சிலர் பிரலாபிப்பர்.

எனினும் இன்று இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலே Folk Song – நாட்டுப்பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளரக் காண்கிறோம். முன்னெப்பொழுதுமில்லாத அளவு பாடல்கள் இயற்றப்படுகின்றன. ,,கச்சேரி' களிலும் அரங்குகளில் கலைஞர்கள் புதிய புதிய நாட்டுப்பாடல்களைப் பாடி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசத்தில்லாழ்த்தி வருகின்றனர். அதன் இரகசியம் என்ன? வேறொன்றுமில்லை. அணு ஆயுத எதிர்ப்பு, சமாதானக் கோரிக்கை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, பலவிதமான உரிமைப் போராட்டம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டுழைக்கும் ஆயிரக்கணக்கான இளைஞரும், பிறரும் தமக்குப் பொழுதுபோக்காகவும், தமது கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துரைக்கும் முகமாகவும் நாடோடிப் பாடல் மெட்டுக்களில் புதிய உள்ளடக்கத்தைப் பெய்கின்றனர். அதிலே ஆத்ம திருப்பியடைகின்றனர்.

பழைய மெட்டுக்கள் ஏற்கனவே மக்கள் நெஞ்சில் நிலைத்திருப்பனவாகையால், விரைவில் புதிய பாடல்கள் யாவராலும் பாடப் பெறுகின்றன. பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகின்றது. இரண்டும் சிறப்புப் பெறுகின்றன இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாற்பது அல்லது ஐம்பது வருடங்கள் வாழ்ந்த மனிதனையும் நானூறு வருடமாக மறைய தெரியாமல் திண்டாகும் கருங்கல் மதிலையும் ஒன்றாக வைத்து இவன் நீர்மேற் குமிழியன் மறைந்து போனான். சுவரே நிலைத்து நிற்கிறது. இன்னும் குறைந்தது நானூறு வருடங்கள் நிற்கும். ஆகவே மனிதன் வாழவில்லை மதில்தான் வாழ்கிறது என்று யாராவது சொல்வார்களா? எவ்வளவு காலம் இருந்தோம் என்பதைக் கொண்டன்று எப்படி இருந்தோம் என்பதைக் கொண்டு வாழ்ந்தோமோ இல்லையா என்பதை நிர்ணயிக்க வேண்டியுள்ளது எவ்வளவு காலந்தான் நின்ற போதிலும் சுவரை வாழ்ந்ததாக நாம் கருதுவதில்லை. அது வாழவில்லை இருக்கிற மனிதனோ வாழ்கிறான் அவனுள்ளே உணர்ச்சிகளும் கருத்துக்களும் எண்ணங்களும் ஊற்றெடுத்து பெருகி வெள்ளக்காடாய் மாறி விடுகின்றன.

I. இப்பந்தியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
II. சுவர் வாழ்வதில்லை என்பதற்கு இங்கு கூறப்பட்ட காரணங்கள் எவை?
III. வெள்ளக்காடு என்பது எவ்வகை அணி விளக்குக.
IV. இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட மரபுத்தொடர் யாது? அதன் பொருளை எழுதுக.
V. பொருள் தருக.
சுவர் -
காடு –

5. புவி வெப்பமடைதல் என்பது உலகளாவிய ரீதியில் பாரிய பிரச்சினையாக உருவாகி உள்ளது. இதனை தடுத்தற் பொருட்டு மரங்கள் வெட்டப்படுவதால் புவிக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் மரம் நடுகையால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கி 100 சொற்களில் அமைந்த துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

(அல்லது)

6. எமது நாட்டில் இன்று குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீரானது பொருளாதாரப் பண்டமாக மாறிவருகின்ற அபாயநிலை காணப்படுகின்றது. எனவே நன்னீரை மாசடையாது பேணிப்பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

National e-learning Portal for The General Education

# G.C.E. ORDINARY LEVEL
## க.பொ.த சாதாரண தரம்
### STUDENT SEMINAR SERIES
### மாணவர் செயலமர்வு
## TAMIL LANGUAGE & LITERATURE
## தமிழ்மொழியும் இலக்கியமும்

# QUESTION PAPER – III
# வினாத்தாள் - III



Powered by

# கல்வி அமைச்சு
# தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கிளை
# தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி - III

## க.பொ.த (சா.த) மாதிரி வினாத்தாள்

தரம் : 11 நேரம் : 2 மணித்தியாலம்

கவனிக்க:

- அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7,ஆம் வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1.சுருக்கமான விடை தருக.

1. ‘‘ஆடிக்குடத்தடையு மாடும்போ தேஇரையும்’’.
   அ. இதில் ஒப்பிடப்படும் இரண்டு பொருட்களும் எவை?
   ஆ. இதில் இடம்பெற்ற அணி யாது?

2. ‘‘மேழி பெருகவேணும் தம்பிரானே
   நாடு தழைக்கவேணும் தம்பிரானே’’
   அ. மேழி என்பதன் பொருள் யாது?
   ஆ. இது எவ்வகையான நாட்டார் பாடல் ஆகும்?

3. ‘‘படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலி’’
   அ. இப்பாடலில் படரெலாம் படைத்தாளை எனகுறிப்பிடப்படுபவர் யார்?
   ஆ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

4. ‘‘தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை’’
   அ. இப்பாடலை பாடியவர் யார்?
   ஆ. தேம்படுபனையின் ஒருவிதை யாருக்கு ஒப்பிடப்படுகிறது.

5. ‘‘நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
   பேணாமை பேதை தொழில்’’
   அ. பேதையரின் தொழில் ஒன்று தருக.
   ஆ. நாரின்மை என்பதன் பொருள் யாது?

6. ‘‘தொடித்தலை விழுத்தண்டுன்றி நடுக்குற்
   றிருமிடை மிடைந்த சிலசொற்’’
   அ. இப்பாடலை பாடியவர் யார்?
   ஆ. முதுமையாளரின் நிலை ஒன்று தருக.

7. உயிருடன் சென்ற ஒருமகள்
செயிருடன் வந்தவிச் சேயிழை.
   1. உயிருடன் சென்ற ஒருமகள் யார்?
   2. சேயிழை என்பதை பிரித்தெழுதுக.
8. ''ஆழப்புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்
ஏறி மதித்து''
   1. இக்கவிதையை எழுதியவர் யார்?
   2. மலையக மக்களின் நிலை இக்கவிதையில் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?
9. ''அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையம் உடையேம் எம் குன்றும் பிறர்
கொள்ளார்.''
   1. அற்றைத் திங்கள் என்பதன் பொருள் யாது?
   2. இப்பாடலில் குறிப்பிடப்படும் குன்றின் பெயர் யாது?
10. ''உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்
பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்''
   1. இப்பாடலில் இடம் பெற்ற இலக்கியம் எது?
   2. இப்பாடலில் குறிப்பிட்படும் பெண்களின் தொழில்கள் யாவை?

2.பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்த்தல் மிகமாண முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.
   1. இப்பாடலில் இடம்பெற்ற நூல் எது?
   2. பாடலில் குறிப்பிடப்படும் இரண்டு இனிய விடயங்களைத் தருக.

2. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.
   1. இப்பாடலைப் பாடியவர் யார்?
   2. ''பிண்ணாக்கும் உண்டாம்'' என்ற தொடரை விளக்குக.?

3. கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதம்
வீட்டி லடைத்துவைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே.
   1. இப்பாடலைப் பாடியவர் யார்?
   2. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் குறிப்பிடுக.

4. இன்றைக்கென்னவோ செவ்வத்தாள் பால் கறக்க விடவில்லை.
பின்னங்கால்களை உதைத்துக் கொண்டு, தலையைச் சிலுப்பி
மூத்தம்மாவைப் பார்த்து சீறிச் சிறி பிகு பண்ணிக்கொண்டிருந்தது.
இந்த மூத்தம்மாவை நினைக்கையில் நெஞ்சில் உவகை நிறையம்.

சுருக்கம் விழுந்தாலும் என்ன மிடுக்காய் நடக்குறா.

1. மேற்படி சிறுகதையில் இவ்வாறு சிந்திப்பவர் யார்?
2. மூத்தம்மாவின் குணவியல்புகளைத் தருக?

5. அன்றிலிருந்து புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல கணிப்பொறி தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும், இன்னொரு பகுதியில் மனைவியும், மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம்.
    1. இப்பகுதி இடம்பெற்ற சிறுகதை யாது?
    2. உவமை அணி பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

3.நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு

1. நாலடியார் கூறும் நட்பு
2. வெற்றிவேட்கை கூறும் நீதிக்கருத்து என்பவற்றை விபரிக்குக?

(அல்லது)

கிருஸ்ண தூதுச் சருக்கத்தில்

1. அத்தினாபுரத்தின் சிறப்புக்கள்
2. கிருஸ்னரின் பெருமைகள் என்பவற்றை விபரிக்குக.

4.மூத்தம்மா என்ன சிறுகதையில்

1. கிராமிய வாழ்வியல் அம்சங்கள்
2. மூத்தம்மாவின் குணவியல்புகள் என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(அல்லது)

பாரதியாரின் சுயசரிதையில்

1. பிள்ளைக்காதல் வெளிப்படும் விதம்
2. விரும்பியவற்றை அடையாமைக்கான காரணங்கள்

**5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவதொன்றுக்கு விடைதருக.**

5.எது நல்ல சினிமா? என்ற கட்டுரையில்

1. படத்தொகுப்பு
2. காட்சிப்படிமம் என்பன தொடர்பான ஆசிரியரின் கருத்தை விளக்குக.

6. அற்றைத் திங்கள் என்ற பாடப்பகுதியில்
    1. பாரிமகளிரின் துயரம்
    2. பறம்பு மலையின் சிறப்புக்கள் என்பன வெளிப்படுமாற்றை விளக்குக?

7. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்
    1. நாவலரின் வேகமும் விவேகமும்
    2. கூட்டமும் வாதப் பிரதிவாதங்களும் பற்றி விபரிக்குக?

# ඉන්ටනෙට් සෙල්ලං

## දිනක වේදෝ ලෙල්ලන්



නැණවත් අන්තර්ජාල භාවිතය ඔබේ වගකීමකි. ඒ සඳහා හැමවිට වැඩිහිටි මග පෙන්වීම ලබාගන්න

Dialog

තිරසාරත්ව අංශයේ පණිවිඩයකි